| 12 |
|---|

பள்ளிக் கல்வித்துறை, வேலூர் மவட்டம்

**அரையாண்டு பொதுத் தேர்வு - டிசம்பர் - 2025**

**விடைக் குறிப்பு**

# பொருளியல்

**VELLORE**

**I. சரியான விடையை குறியீட்டுடன் எழுதுக.** **20 x 1 = 20**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | மொத்தங்கள் | 11 | அ | வங்கி உரிமம் |
| 2 | இ | பணவீக்கம் | 12 | இ | ஜுலை 1982 |
| 3 | அ | ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 | 13 | ஆ | அயல் நாட்டு செலாவணி |
| 4 | ஆ | பொருளாதார நலன் | 14 | அ | ஜகார்த்தா |
| 5 | அ | பூஜ்யம் | 15 | ஆ | 1988 |
| 6 | ஈ | C + S + T + Rf | 16 | ஆ | 2017 ஜுலை 1 |
| 7 | ஈ | (அ) மற்றும் (ஆ) | 17 | ஈ | இவை அனத்தும் |
| 8 | ஈ | வட்டி வீதத்தையும் | 18 | இ | இ-கழிவுகள் |
| 9 | அ | மைய பணவியல் அமைப்பு | 19 | இ | சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா |
| 10 | இ | தவழும் | 20 | அ | முதல் நிலை விவரம் |

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா)** **7 x 2 = 14**

| வினா எண் | விடை | மதிப் பெண்கள் |
|---|---|---|
| **21** | 1. பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பதுஆகும்.<br>2. பேரியல் பொருளாதாரம் "வருவாய் கோட்பாடு" எனவும் அழைக்கப்படுகிறது. | **2** |
| **22** | ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும். | **2** |
| **23** | விவசாயிகள் தங்களின் சுயநலத்திற்காக உற்பத்திப் பொருளை ஒதுக்கி வைக்கின்றனர். விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி, தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது. | **2** |
| **24** | கீன்ஸின் கூற்றுப்படி "முழு வேலை நிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும்" | **2** |
| **25** | வருமான மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது.<br>**(அல்லது)**<br>MPC = $\Delta C/\Delta Y$ | **2** |
| **26** | 1. **திறனுடைய உற்பத்தி:** பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பிட்டுத் தனித் தேர்ச்சி கிடைப்பதனால் நன்மைகளை பெறுகின்றன.<br>2. **நாடுகளிடையே விலை சமன் அடைதல்:** பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது. | **2** |

| | | |
|---|---|---|
| **27** | அரசின் வருவாய் மற்றும் செலவினங்களின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும். | **2** |
| **28** | ஒரு விதை உரம் கலந்த களி மண்ணால் மூடி வைக்கப்பட்டு பிறகு உலர்த்தப்படுகிறது. இதை எங்கு வேண்டுமோ அங்கு விதைக்கலாம். | **2** |
| **29** | பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைப்பது ஆகும். | **2** |
| **30** | 1. இது திட்டக் குழுவுக்கு மாற்றாக உருவாக்கப்பட்டது.<br>2. ஜனவரி 1, 2015 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>3. இதன் தலைவர் இந்திய பிரதமர் ஆவார். | **2** |


**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21**

<table>
<tr><th>வினா எண்</th><th colspan="2">விடை</th><th>மதிப்பெண்</th></tr>
<tr><td>31</td><td colspan="2">1. முதலாளித்துவ பொருளாதாரம் (தந்தை ஆடம் ஸ்மித்)<br>2. சமத்துவ பொருளாதாரம் (தந்தை - கார்ல் மார்க்ஸ்)<br>3. கலப்பு பொருளாதாரம்: முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டின் இயல்புகளையும் உள்ளடக்கியது.</td><td>3</td></tr>
<tr><td>32</td><td colspan="2">1. ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய நாட்டு வருவாய் உதவுகிறது.<br>2. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து உள்ளதா என்பதை கண்டறிய நாட்டு வருவாய் உதவுகிறது.<br>3. பொருளாதார வல்லுனர்கள் திட்டமிட, நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்த நாட்டு வருமான புள்ளி விவரங்கள் பயன்படுகிறது.</td><td>3</td></tr>
<tr><td>33</td><td colspan="2">1. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைகோ வாய்ப்பில்லை.<br>2. விலை கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.<br>3. வட்டி விகித நெகிழ்வுத்தன்மை சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் சமநிலையை உண்டாக்கும்.<br>4. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.</td><td>3</td></tr>
<tr><td rowspan="2">34</td><td>தன்னிச்சையான முதலீடு</td><td>தூண்டப்படுகின்ற முதலீடு</td><td rowspan="2">3</td></tr>
<tr><td>1. தன்னிச்சையானது.<br>2. பொருளாதார மந்தகாலத்தில் அரசால் மேற்கொள்ளுவது.<br>3. சமூக நோக்கம் உடையது.<br>4. வருவாய் நெகிழ்ச்சியற்றது.</td><td>1. திட்டமிடப்பட்டது.<br>2. பொருளாதார வளர்ச்சி காலத்தில் தனியாரால் மேற்கொள்ளுவது.<br>3. இலாப நோக்கம் உடையது.<br>4. வருவாய் நெகிழ்ச்சி உள்ளது.</td></tr>
<tr><td>35</td><td colspan="2">1. விற்பனையை விரிவுபடுத்துதல்<br>2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்<br>3. வாணிகப் பரவலாக்கம்<br>4. போட்டி இடர்களை குறைத்தல்</td><td>3</td></tr>
<tr><td>36</td><td colspan="2">1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்.<br>2. பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.<br>3. உறுப்பினர் நாடுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்துதல்.<br>4. ஏழ்மையை ஒழிப்பது.<br>5. பயங்கரவாத செயல்களை தடுப்பது.</td><td>3</td></tr>
<tr><td>37</td><td colspan="2">1. அரசுக்கு கட்டாயம் செலுத்தப்பட கூடிய ஒன்று.<br>2. வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.<br>3. வரியானது தண்டனைத் தொகை போன்று விதிக்கப்படுவது அல்ல.</td><td>3</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **38** | 1. மனிதவளம்<br>2. தொழில்நுட்ப அறிவு<br>3. அரசியல் சுதந்திரம்<br>4. சமூக அமைப்பு<br>5. ஊழலற்ற நிர்வாகம்<br>6. பரம்பரை சொத்துரிமை (**எவையேனும் 3** ) | 3 |
| **39** | **அ) பருவநிலை மாற்றம்** : வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும் அவைகள் நிலவும் காலங்களில் ஏற்படும் குறிப்பிடத்தகுந்த மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படுகிறது.<br>**ஆ) அமில மழை : சல்பர்** - டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் நீருடன் வினைபுரிந்து மழை மற்றும் பனிப் பொழிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது அமிலமழை ஆகும். | 3 |
| **40** | 1. கருப்புப் பணத்தை ஒழிப்பது.<br>2. கள்ள பணத்தை தடுப்பது.<br>3. இலஞ்சத்தை தடுப்பது.<br>4. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது. | 3 |

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35**

| வினா எண் | விடை | | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| **41. அ.** | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமத்துவம்** | **கலப்புத்துவம்** | 5 |
| | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை | |
| | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் | |
| | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை | |
| | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு | |
| | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை | |
| | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் | |
| | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை | |
| **ஆ.** | 1. **உற்பத்தி முறை** : ஒரு நாட்டின் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளில் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.<br>2. **வருவாய் முறை** : உற்பத்தி நிலைகளில் உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம்.<br>3. **செலவு முறை** : ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு | | | | 5 |

<table>
<tr><td></td><td>வருவாய் கணக்கிடப்படுகிறது.<br>GNP = C + I + G + (X - M)<br>C - தனியார் நுகர்வு செலவு    I - தனியார் முதலீட்டு செலவு<br>G - அரசின் கொள்முதல் செலவு    (X - M) - நிகர ஏற்றுமதி</td><td></td></tr>
<tr><td>42.<br>அ</td><td>1. வாணிபச் சூழல் வேலையின்மை: இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாதபோது நிகழ்வதாகும்.<br>2. பருவகால வேலையின்மை: ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்.<br>3. உடன்பாடில்லா வேலையின்மை: உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுகிறது.<br>4. படித்தவர் வேலையின்மை: சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.<br>5. மறைமுக வேலையின்மை: உழைப்பாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜியம் ஆகும்.</td><td>5</td></tr>
<tr><td>ஆ</td><td><table>
<tr><th>வ. எண்</th><th>மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறன் (MEC)</th><th>முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறன் (MEI)</th></tr>
<tr><td>1</td><td>இது மூலதனத்தின் அளிப்பு விலையை பொறுத்து அமைகிறது.</td><td>மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது</td></tr>
<tr><td>2</td><td>ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது.</td><td>ஆரம்ப மூலதனத்திற்கு பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தை காட்டுகிறது.</td></tr>
<tr><td>3</td><td>வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது.</td><td>வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது</td></tr>
<tr><td>4</td><td>இது ஒரு "இருப்பு" கருத்துரு ( stock ).</td><td>இது ஒரு ஓட்டக் ( FLOW ) கருத்துரு.</td></tr>
<tr><td>5</td><td>ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது.</td><td>வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது.</td></tr>
</table></td><td>5</td></tr>
<tr><td>43.<br>அ</td><td>1. பூரிப்பு : அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.<br>2. பின்னிறக்கம் : பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.<br>3. மந்தம் : மிக மோசமான கட்டம். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் தேக்கமடையச் செய்யும்.<br>4. மீட்சி : அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.<br><br></td><td>5</td></tr>
<tr><td>ஆ.</td><td><u>முதன்மைப் பணிகள்</u><br>அ.) வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.<br>(1) கேட்பு வைப்புகள்: எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தை பெறலாம்.<br>1. சேமிப்பு கணக்கு    2. நடப்பு கணக்கு<br>(ii ) கால வைப்புகள்: குறிப்பிட்ட காலம் பெறமுடியாது. கூடுதல் வட்டி வழங்கப்படும்.<br>1. நிலை வைப்பு    2. தொடர் வைப்பு<br>ஆ) கடன் வழங்கல்: ரொக்க கடன், மாற்றுச்சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று.</td><td>5</td></tr>
</table>

## இரண்டாம் நிலைப் பணிகள்

**அ) முகமைப் பணிகள் :**

1. காசோலைகளை பணமாக்குதல்.
2. வருமானத்தை பெறுதல்.
3. செலவுகளை செலுத்துகிறது.

**ஆ) பொதுப் பயன்பாட்டு பணிகள் :**

1. பாதுகாப்பு பெட்டக வசதி.
2. பயணக் காசோலை வழங்குதல்.
3. அந்நிய செலாவணியை கையாளுதல்.
4. கடன் உறுதியளிப்பு கடிதம்.
5. பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்.
6. மின்னணு வங்கி

**இ) இதர பணிகள்:**

1. பண அளிப்பு
2. கடன் உருவாக்கம்
3. புள்ளி விபரங்களை திரட்டுதல்

---

**44. அ**

- 1911-ல் அமெரிக்கப் பொருளியல் அறிஞர் இர்விங் ஃபிஷர் தனது "பணத்தின் வாங்கும் சக்தி" என்ற நூலில் இக்கோட்பாட்டை நவீன வடிவத்தில் கொடுத்துள்ளார்.

**விளக்கம்**

1. இக்கோட்பாட்டை பரிவர்த்தனை சமன்பாடு வாயிலாக இர்விங் ஃபிஷர் விளக்கினார்.
2. பண அளிப்பின் அளவில் மாற்றம் அடையும்போது விலையும் மாற்றம் அடையும்.

சமன்பாடு : MV = PT

M - மொத்த பண அளவு. P - பொது விலை மட்டம். V - பணத்தின் சுழற்சி வேகம். T - வாணிப அளவு

3. குறிப்பிட்ட கால மொத்த பண அளிப்பு ( MV ) மொத்த பணத்தேவை( PT ) மதிப்பிற்கு சமம்.

**4. இது காகித பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது.**

5. நவீன வாணிப பொருளாதாரத்தில் காகித பணத்துடன் வங்கி கேட்பு வைப்புகள், கடன் பணம், அவைகளின் சுழற்சி வேகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இர்விங் ஃபிஷர் தனது சமன்பாட்டினை **கீழ்கண்டவாறு விரிவாக்கினார்.** 5


ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு விரிவானச் சமன்பாடு

$$PT = MV + M^1 V^1 \text{ அல்லது } P = \frac{MV + M^1 V^1}{T}$$

**வரைபட விளக்கம்:**


**வரைபடம் A.**

விலைமட்டச் சார்பு நேர்கோடு வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து அமையும்போது பணத்தின் அளவு, விலை மட்டம் இடையே நேரடி சமவிகித உறவை விளக்குகிறது.




**வரைபடம் B**

பணமதிப்பு சார்பு வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி சரிந்து பண அளவிற்கும் பண மதிப்பிற்கும் உள்ள எதிர்மறை தொடர்பை சுட்டிக்காட்டுகிறது.



<table>
<tr><td>ஆ.</td><td>
1. **பண அதிகார அமைப்பு :** வங்கி அமைப்பை நிலைப்படுத்துகிறது.<br>
2. **காகிதப் பண வெளியீடு :** இது காகித பணத்தை அச்சிட்டு வெளியிடும் உரிமை பெற்றது.<br>
3. **அரசுக்கான வங்கி :** இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கியாகும்.<br>
4. **வங்கிகளின் வங்கி :** அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.<br>
5. **கடன் வழங்குவதில் கடைசி புகலிடம் :** வணிக வங்கிகளுக்கு நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது கடனை வழங்கி உதவுகிறது.<br>
6. **அந்நியச் செலாவணியின் பாதுகாவலர் :** வெளிநாட்டு பண இருப்புகளை பாதுகாக்கும் பணியினை செய்கிறது.
</td><td>5</td></tr>
<tr><td>45.<br>அ</td><td>
<table>
<tr><th>எண்</th><th>உள்நாட்டு வாணிபம்</th><th>பன்னாட்டு வாணிபம்</th></tr>
<tr><td>1</td><td>ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வாணிபம்.</td><td>பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம்</td></tr>
<tr><td>2</td><td>பொருட்கள் மற்றும் பணிகள் இடம்பெயர்தல் தடை ஏதுமில்லை</td><td>சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் உண்டு</td></tr>
<tr><td>3</td><td>ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது</td><td>பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது</td></tr>
<tr><td>4</td><td>புவி அமைப்பு மற்றும் காலநிலை ஒரே மாதிரி இருக்கும்</td><td>புவி அமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும்</td></tr>
<tr><td>5</td><td>உழைப்பு, மூலதனம் தடையில்லாமல் இடம்பெயரும்.</td><td>உழைப்பு, மூலதனம் இடம்பெயர தடை</td></tr>
</table>
</td><td>5</td></tr>
<tr><td>ஆ.</td><td>
1. **உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி.** உறுப்பு நாடுகளின் நிலை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்கிறது.<br>
2. **பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி**. உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வாணிப நீண்ட கால வளர்ச்சி அடைய உதவி செய்கிறது.<br>
3. **கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்.** முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிற வழிகளில் கடன்பெற ஈட்டுறுதி வழங்குவது.<br>
4. **வெளிநாட்டு தனியார் முதலீட்டிற்கு ஊக்கம் அளித்தல்.** தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியை செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது.<br>
5. **தொழில்நுட்ப சேவைகள்** வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.
</td><td>5</td></tr>
<tr><td>46.<br>அ</td><td>
**நீடித்த வளர்ச்சியின் முக்கியத்துவம்.**<br>
இப்போதுள்ள தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையினரும் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடு நீடித்த நிலையான மேம்பாடு. இது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம்.<br>
**நோக்கங்கள்:**<br>
1. வறுமையை ஒழித்தல்.<br>
2. பட்டினியை முடிவுக்கு கொண்டு வருதல்.<br>
3. நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.<br>
4. தரமான கல்வியை வழங்குதல்.<br>
5. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்.<br>
6. குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.<br>
7. அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினை வழங்குதல்.<br>
8. நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினை வழங்குதல்.
</td><td>5</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 9. தேவையான கட்டமைப்புகளை வழங்குதல்.<br>10. தொழில்மயமாக்கல், புத்தகங்களை ஊக்குவித்தல். | |
| **ஆ.** | 1. **பொது வருவாய்:** அரசின் வரி மற்றும் வரி இல்லா வருமானங்கள் பற்றியது.<br>2. **பொதுச் செலவு:** அரசின் செலவு பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொது செலவை கட்டுப்படுத்துதல் பற்றியது.<br>3. **பொதுக்கடன்:** அரசு கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது<br>4. **நிதி நிர்வாகம்:** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றியது.<br>5. **நிதிக்கொள்கை:** வரிகள், மானியங்கள், பொதுக் கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும். | 5 |
| **47. அ** | 1. **மக்களாட்சி திட்டமிடுதல்:** திட்டமிடுதலின் அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் முறையே மக்களாட்சி திட்டமிடுதல் ஆகும்.<br>2. **சர்வாதிகார திட்டமிடுதல்:** பொருளாதாரத்தின் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முறையே சர்வாதிகார திட்டமிடுதல் ஆகும்.<br>3. **மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல்:** திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.<br>4. **பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல்:** இது மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாடின்றி செயல்படும் முறையாகும்.<br>5. **வழிகாட்டும் திட்டமிடுதல்:** இது திட்டக்குழுவின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படுதல் ஆகும்.<br>6. **தூண்டும் திட்டமிடுதல்:** இது திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை மக்களைக் கொண்டே செயல்படுத்துவதாகும். | 5 |
| **ஆ.** | (see below) | 5 |

**ஆ.**

| வ. எண் | x | x-x | (x-x)$^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | -1 | 1 |
| 2 | 22 | 7 | 49 |
| 3 | 9 | -6 | 36 |
| 4 | 15 | 0 | ¯0 |
| 5 | 20 | 5 | 25 |
| 6 | 17 | 2 | 4 |
| 7 | 12 | 3 | 9 |
| 8 | 11 | 4 | 16 |
| | Σx = 120 | | Σ(x-x)$^2$=140 |

$$\overline{X} = \frac{\sum X}{n}$$

$n = 8$

$$\overline{X} = \frac{120}{8} \qquad \therefore \overline{X} = 15$$

$$\sigma = \sqrt{\frac{\Sigma(X-\overline{X})^2}{n}} = \sqrt{\frac{140}{8}}$$

$$= \sqrt{17.5} \qquad \therefore \sigma = 4.18$$

ஆகையால் திட்டவிலக்கம் (σ) = 4.18

5